ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமணிக்கூடம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமணிக்கூடம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் || **1** ||

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் || **2** ||

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் || **3** ||

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே |
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே || **4** ||

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா || **5** ||

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் || **6** ||

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – தூம்புடை

‡ தூம்புடைப் பனைக் கை வேழம் ⋆
துயர் கெடுத்தருளி ⋆
மன்னு காம்புடைக் குன்றம் ஏந்திக் ⋆
கடு மழை காத்த எந்தை ⋆
பூம் புனற் பொன்னி முற்றும் புகுந்து ⋆
பொன் வரண்ட ⋆
எங்கும் தேம் பொழில் கமழும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.1** ‖

கவ்வை வாள் எயிற்று வன் பேய்க் ⋆
கதிர் முலை சுவைத்து ⋆
இலங்கை வவ்விய இடும்பை கூரக் ⋆
கடுங்கணை துரந்த எந்தை ⋆
கொவ்வை வாய் மகளிர் கொங்கைக் ⋆
குங்குமம் கழுவிப் போந்த ⋆
தெய்வ நீர் கமழும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.2** ‖

மாத் தொழில் மடங்கச் செற்று ⋆
மறுதிற நடந்து ⋆
வன் தாள் சேத்தொழில் சிதைத்து ⋆
பின்னை செவ்வித் தோள் புணர்ந்த எந்தை ⋆
நாத் தொழில் மறை வல்லார்கள் ⋆
நயந்தறம் பயந்த ⋆
வண் கைத் தீத் தொழில் பயிலும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.3** ‖

தாங்கரும் சினத்து வன் தாள் ⋆
தடக் கை மா மருப்பு வாங்கி ⋆
பூங்குருந்தொசித்துப் புள் வாய் பிளந்து ⋆
எருதடர்த்த எந்தை ⋆
மாங்கனி நுகர்ந்த மந்தி ⋆
வந்து வண்டிரிய ⋆
வாழைத் தீங்கனி நுகரும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.4** ‖

கரு மகள் இலங்கை ஆட்டி ⋆
பிலங்கொள் வாய் திறந்து ⋆
தன் மேல் வரும் அவள் செவியும் மூக்கும் ⋆
வாளினால் தடிந்த எந்தை ⋆
பெரு மகள் பேதை மங்கை ⋆
தன்னொடும் பிரிவிலாத ⋆
திருமகள் மருவும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.5** ‖

கெண்டையும் குறளும் புள்ளும் ⋆
கேழலும் அரியும் மாவும் ⋆
அண்டமும் சுடரும் ⋆
அல்லா ஆற்றலும் ஆய எந்தை ⋆
ஒண் திறல் தென்னன் ஓட ⋆
வட அரசோட்டம் கண்ட ⋆
திண் திறலாளர் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே || **4.5.6** ||

குன்றமும் வானும் மண்ணும் ⋆
குளிர் புனல் திங்களோடு ⋆
நின்ற வெம் சுடரும் ⋆
அல்லா நிலைகளும் ஆய எந்தை ⋆
மன்றமும் வயலும் காவும் ⋆
மாடமும் மணம் கொண்டு ⋆
எங்கும் தென்றல் வந்துலவும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே || **4.5.7** ||

சங்கையும் துணிவும் பொய்யும் ⋆
மெய்யும் இத் தரணி ஓம்பும் ⋆
பொங்கிய முகிலும் ⋆
அல்லாப் பொருள்களும் ஆய எந்தை ⋆
பங்கய முகுத்த தேறல் ⋆
பருகிய வாளை பாய ⋆
செங்கயல் உகளும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே || **4.5.8** ||

பாவமும் அறமும் வீடும் ⋆
இன்பமும் துன்பம் தானும் ⋆
கோவமும் அருளும் ⋆
அல்லாக் குணங்களும் ஆய எந்தை ⋆
மூவரில் எங்கள் மூர்த்தி ⋆
இவன் என முனிவரோடு ⋆
தேவர் வந்திறைஞ்சும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.9** ‖

‡ திங்கள் தோய் மாட நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானை ⋆
மங்கையர் தலைவன் வண் தார்க் ⋆
கலியன் வாய் ஒலிகள் வல்லார் ⋆
பொங்கு நீர் உலக மாண்டு ⋆
பொன் உலகாண்டு ⋆
பின்னும் வெங்கதிர்ப் பரிதி வட்டத்தூடு போய் ⋆
விளங்குவாரே ‖ **4.5.10** ‖

**திரு திருமாமகள் நாச்சியார் சமேத வரதராசப்பெருமாள் திருவடிகளே சரணம்**